Gnanalayam - The Wisdom Temple
(a unit of Light Bridge Foundation)
No: 27, Jeeva Street, Muthirayarpalayam, Pondicherry 605009, INDIA.

**ஓம் ஈஸ்வராய நமஹ!**

**ஆறுமுகனார் தீட்சையின் போது (26-12-2019), அவர் உரைத்த உபதேசம்**

ஈசனின் பிள்ளைகளே! கலியுலகினில் பிறவி கொண்ட ஆன்மாக்களே! உரைப்பவன் ஆறுமுகனே என்றே உணர்ந்திடுங்கள். கலி எல்லையில் வாழ்கின்றோம் என்பதனைப் பூரணமாய் உணர வேண்டும். கலியின் எல்லை என்பது யாது? நஞ்சாற்றல்களின் உச்ச நிலையே கலி எல்லையாகும். நஞ்சுகளிலே பலவிதம் உண்டு. பல்வேறு கனிம ஆற்றல்களின் அமிலக் கழிவுகள் யாவும் பிறவிகளாய் ஆன்மாவினைச் சூழ்ந்திடும். பிரிபடாத அணுக்களையும் தம்மோடு இணைத்தே பயணித்திடும் ஆன்மாக்கள் அனைத்தும் அதனோடு இணைந்திட்ட அமிலக்கழிவுகளையும் பல பிறவிகளாய் ஏற்றே செயல்புரிகின்றது.

நஞ்சு என்று அழைக்கப்படும் அவ்வமிலக் கழிவுகள் யாவுமே ஆன்மாவின் ஒளியினை மறைத்திடும் திரைகளாய் உருமாறுகின்றது. ஆன்ம ஒளியினைக் கொண்டே அறிவு மற்றும் மனம் என்றே உரைக்கப்படும் துணை அணுக்கள் யாவும் இயங்கிடும். ஒளியாற்றல் என்பது இருவேறு செயல்களை ஆற்றிடும். ஒளியாகிய இறைவனை உணர்த்திடும், இயக்கத்திற்கான வெப்ப ஆற்றலை நல்கிடும்.

ஆன்மாவானது சூரியனாகிய ஒளிவீசிடும் இறைவனை உணர்ந்தே ஏற்றிடும். அதனின்று வெளிப்படும் வெப்ப ஆற்றலைக் கொண்டே தனது கருத்துகள்களைப் பிரித்தே ஏற்றிடும். வெப்பம் என்பது உணரப்படும் எனினும் எங்கிருந்து தோன்றுகின்றது என்பதனை ஒளி ஒன்றே உணர்திடும். வெப்பமும், ஒளியும் இணைபிரியாதவை என்று உணர வேண்டும்.

Gnanalayam

கலி எல்லையில் அமிலக் கழிவுகளால் சூழப்பட்டுள்ள ஆன்மாவானது சூரிய ஒளி ஆற்றலை ஏற்றிட இயல்வதில்லை. சூரியனைக் கண்ணுற்றாலும் அதன் வெப்ப ஆற்றலை ஏற்று இயங்கிட முனைந்திட்டாலும் ஆன்மாக்கள் யாவும் தன்னைச் சூழ்கின்ற திரைகளைக் கடந்து ஆற்றல்களைத் தன் கருத்துகள்களுக்குப் பகிர்ந்திட இயல்வதில்லை.

ஆன்மா என்பது ஆற்றல்களைப் பெற்றிட்டாலும் தன் கருத்துகள்களுக்குப் பகிர்ந்திட இயலாத நிலையில் அவ்வாற்றல்கள் அனைத்தும் விண்வெளிக்கே செல்கின்றன. மூளையின் மத்தியிலே அமைந்துள்ள தலைமைச் சுரபியும் சீரான ஆற்றல்களைப் பெறுவதில்லை. அதன் மூலம் உடலும் வாடுகின்றது, சிறைப்பட்டுள்ள ஆன்மத்துகள்களும் வாடுகின்றன.

சூரிய ஒளியானது எத்தருணமும் மின் காந்த அலைகளாகிய ஆற்றல்களை அளித்த வண்ணமேயுள்ளது. எனினும் ஆன்மாக்கள் ஏற்றிடும் ஆற்றலை சிரசினுள் செலுத்திட இயல்வதில்லை. மானுட ஆன்மாக்களின் துகள்கள் யாவும் சிரசின் அணுக்களிலே சிறை கொண்டுள்ள காரணத்தால் அவை சூரிய ஒளியாற்றலாகிய மின் காந்த அலைகளை ஏற்றிடவே தவறுகின்றன. ஆற்றல்களை அற்ற காரணத்தினால் வாடியே நின்றிடும் ஆன்மத்துகள்கள் என்றுணர்க. அறிவு எனப்படும் துணை அணுக்கள் யாவும் தனது ஆற்றல்களைக் கொண்டே ஆத்மத்துகள்களுக்கு உணவளித்திடல் வேண்டும்.

உடலின் அழிவு என்பதே கொடிய நிலை எனில் ஆன்மாவின் அழிவு என்பது எத்தகைய கொடிய நிலை என்பதனை மனிதர்கள் உணர்ந்திட வேண்டும். உபதேசம் என்பதே, உணர்வு நிலைதனைப் பெருக்கி ஈச

உலகமான மாற்று தேசத்திற்கு அழைத்துச் சென்றிடும் பொருட்டே அளிக்கப்படுகின்றது. ஆன்மாவின் அழிவு என்பது ஆன்மத்துகள்களின் அழிவாகவே கருதப்படும். அழிவு என்பதோ ஈசனின் தொடர்பு துண்டிக்கப்படுவதனையே குறித்திடும். எனில் யாம் அளித்திடும் தீட்சைகளை குருவான அன்னையின் மூலம் பூரணமாய் ஏற்றிட்டு, கழிவுகளை அகற்றி, விழிகளைத் தூய்மையுறுத்தி ஆன்மாவினை விடுவித்தருளல் வேண்டும்.

ஆன்ம விடுதலை பெற்ற மானுடர்கள் தனது அனைத்து விடுபடாத துகள்களையும் முழுமையாக விடுவித்திடவே தீட்சைகளைப் பெற்று பயின்றிடல் வேண்டும். உயரிய இத்தருணமே கலி எல்லையின் எல்லை நிகழ்வாகும். உணர்ந்து ஏற்றிட்டால் உயர்ந்திடலாம். ஈசனைக் கலப்புற்றால் ஆன்மாக்களுக்கு அழிவில்லை. புவிக்கோளும் புணரமைப்பு கொண்டு புதுயுகம் மலர்ந்திடவே உற்றதுணையாற்றிடும். உணர்ந்தே தீட்சைகளை ஏற்றிடுவீர், பயின்றிடுவீர், ஆன்ம விடுதலையும் கண்டிடுவீர்.

**வாழ்த்துகின்றோம்.**